1217

ANANDA VIJAYAN

ஆனந்த விஜயன்

(மாதாந்தப் பத்திரிகை)

"நீதி ஜனத்தை உயர்த்தும்"

தொகுதி 1 மே-1924 பகுதி 5

பொருளடக்கம்

17 JUL 1925

இலக்கம்		பக்கம்
1	கடவுள் வணக்கம்	145
2.	பொறையுடைமை	146
3.	தற்காலநிலைமையும் கட்டாயக்கல்வியும் ...	151
4.	தற்காலக்கல்வியுந் தமிழின்நிலைமையும்	155
5.	இந்தியரும் கல்வியும்	158
6.	செல்வ நிலையாமை	160
7.	விருந்தினரை உபசரித்தல்	163
8.	கணவன் பெயர்	166
9.	காலத்தினாற் செய்த நன்றி	167
10	மனோன்மணிக் கண்ணி ...	169
11.	விடுமுறைப் பிரயாணம்	171
12.	கடிதங்கள்	175

PRINTED AT
THE PALAMCOTTAH PRINTING PRESS
PALAMCOTTAH

அறிவிப்பு

புதிதாகச்சேரும் சந்தாதாரர்கள் பலர், பத்திரிகையை வி. பி. யில் அனுப்புமாறு அநுமதி செய்கின்றனர். வி. பி. யில் அனுப்புவதால் சந்தாதாரர்களுக்கு அதிகச் செலவும், சில தருணங்களில் அவர்கள் ஊரில் இல்லாவிடின், எமக்கு நஷ்டமும் ஏற்படுவதாயிருக்கின்றது. பத்திரிகையின் சந்தாவோ ஒரு ரூபாய்தான். ஆதலின், இந்தச் சொற்பத் தொகையை ஏற்கெனவே மணியார்டர் செய்யும்பட்சத்தில், செலவுஞ் சுருங்கும்; சிரமமும் இலகுவாகும். புதிதாய் ஆர்டர் அனுப்புவோரும் முன்னரே ஆர்டர் அனுப்பியுள்ளோரும், இதைக் கவனித்துக் கொள்ளும்படி மிகவும் அன்பாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கொழும்பு நகரத்தில், ஸ்ரீமான் சூ. அமிர்தமிக்கேல் நாடார் அவர்களும், ஸ்ரீமான் வி. மீ. ஏசுவடியான் நாடார் அவர்களும், எமது கௌரவ ஏஜெண்டுகளாயும், ஸ்ரீமான் ஞா. பா. வேதநாயக நாடார் அவர்கள் எமது கௌரவ நிருபராகவும் உழைத்து வருகின்றனர். இலங்கையிலுள்ள நண்பர்கள் அவர்களிடம் சந்தாத் தொகை செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

நமது பத்திரிகைச் சுற்றுப்பிரயாண ஏஜெண்டு நாசரேத்து ஸ்ரீமான் M. துரைசாமி தாமஸ் நாடார் அவர்கள் தங்கள் சொந்தமுயற்சியின் நிமித்தம் சென்ற மாசம் உத்தியோகத்தினின்றும் நீங்கியிருந்தார்கள். ஆயினும் அவர்களது பொதுநலவிருப்பு நீங்காமையால் நண்பர்களுடைய வேண்டுகோளின்பேரில் மறுபடியும் இந்த மாசம் முதலாம் தேதிமுதல் தங்கள் உத்தியோகத்தை முன்போலவே வெகுவூக்கமாய் நிர்வகித்து வருகின்றார்கள்.

பத்திராதிபர்.

ஆனந்த விஜயன்

'நீதி ஜனத்தை உயர்த்தும்'

(*Rights Reserved*)

தொகுதி I | மே-1924 | பகுதி 5

கடவுள் வணக்கம்

விண்கிழித் தோங்கி மின்பயில் கொடிஞ்சி
வேய்ந்துயர் தேர்த்திரள் காப்போ
கண்கிழித் தொளிபாய் வாட்டிரள் காப்போ
கால்தவிர் பரித்திரன் காப்போ
மண்கிழித் தொழுகும் புனலெனச் சீறி
மதம்பொழி கரித்திரள் காப்போ
புண்கிழித் தடலார் காப்பதோ நீயே
புரந்துசெய் காப்பது காப்பே.

இதன் பொருள், பகவானே, மேகமண்டலத்தைக் கடந்துயர்ந்து ஒளி பொருந்திய சிகரத்தை அணிந்து சிறந்துள்ள தேர்ப்படைகள் எமக்குக் காவலாகுமோ? பார்ப்பவருடைய கண்கள் பிதுக்கும்படி ஒளிவீசும் வாள் முதலான ஆயுதக் கூட்டங்கள் எமக்குக் காவலாகுமோ? தாம செல்லும வேகத்தினலே பெருங் காற்றும் பின்னிடத்தக்க குதிரைப்படைகள் எமக்குக் காவலாகுமோ? நிலததைப் பிளந்து கொண்டு ஓடும பெருவெள்ளம் போலுஞ் சினந்து மத ஜலததைப் பொழிகின்ற யானைப்படைகள் எமக்குக் காவலாகுமோ? எதிர்த்து வந்த பகைவர்தம் உடல்களைச் சின்ன பின்னமாய்ப் புண்படுததும் வல்லமையுள்ள யுத்தவீரர்கள் காப்பது எமக்குக் காவலாகுமோ? இவையெல்லாங் காவல்

ஆகா. இவை யாவையும் படைத்த சர்வல்லவனான நீயே எல்லா வுலகங்களையும் காப்பாற்றி அருள்செய்யுங் காவலே எமக்குக் காவலாகும், என்றவாறு.

பொறையுடைமை

(ஸ்ரீமான் பால் அப்பொஸ்லோன் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், ஸ்காட் கிறிஸ்தியன் காலேஜ், நாகர்கோவில)

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

தன்னை வெட்டித் தோண்டுவோரைத் தாங்கும் நிலம் போல, தன்னை அவமதிப்பவரைப் பொறுத்தல் அதிஉத்தமமான தர்மமாம். நமக்குத் தீதுசெய்வோனாயும், நம்மைக் குறித்து தீது சொல்வோரையும் பொறுத்து அவரைப் பாதுகாத்தல் அதிமேலான அறமாகும். இப்பாவிலுள்ள உபமேயச் சிறப்பிற்கேற்ப, இதன் உபமானச்சிறப்பும மிகப்பொலிந்து விளங்குகின்றது. நாயனாருடைய பாக்களில் ஆங்காங்கே அமைந்திருக்கும் உவமையணிகள, உபமேயத்துக்குப் பொருத்தமும, தெளிவான திருஷ்டாந்தமுமா யிருக்கின்றன. அவர் தமது அரிய உபதேசங்களைச் சுருங்கச் சொலலி, ஏற்ற உவமைகளைக் கொண்டு விளங்க வைக்கிறார். எல்லாவற்றையும் பொறுத்தலில் பூமிசிறந்ததாதல் பற்றி வடமொழில் அதற்கு "ஸாவம ஸஹா" எனனும் பெயர வந்ததெனபர. அசரப் பொருளின் லட்சணத்தைக் கொண்டு சரபபொருளாகிய மனுஷனுக்குப் புத்திசொல்லுகிறார். இவர் மாததிரமே யனறி, உலகத்தின நானுபாகங்களிலும் உற்பவித்த உத்தமர் பலரும, பொறுமை முக்கியமான தெனபதைத் தம் போதனையினாலும் சாதனையினாலும் தெள்ளத் தெளிய வெளியிட்டனர்.

பெரியோர் தமது நறபோதனையினால் பொறையுடைமையை வெகுவாய்ப் பாராட்டியிருக்கின்றனர் என்பதற்கு அவர் அருளிச் செய்த நீதிமொழிகளே தக்க சான்றாம. அவைகளினால் பொறுமையின் முக்கியமும் அவசியமும் நன்கு புலபபடும். பொறை

யாகிய பெருங்குணத்தை யாவரும் தமதாக்கிக் கொள்ள முயல வேண்டுமென்னும் அபிலாஷையுடையவராய் அதைப் பெருமைப்படுத்தியும் வற்புறுத்தியும் பேசியிருக்கின்றனர். பொறைக் குணம் பெருங்குணமென நன்கு மதித்து அடிக்கடி அதைத்தம் வாயிலும் நாவிலும் எடுத்துக்கூறினர். சந்தனமரமானது தன்னைவெட்டிவீழ்த்தும் கோடரிக்கு நறுமணமளிப்பதுபோல, நமக்குத் தீமைசெய்வோர்க்கும் நாம் நன்மை செய்யவேண்டுமென்றும், மாமரமானது தன்னை வெட்டுவோனுக்குத் தண்ணிழல் கொடுப்பதுபோல், நம்மைக் கெடுத்தழிக்கக் கச்சைகட்டி நிற்போரை க்ஷமித்து அவரது சுகக்ஷேமத்தை நாடி அவருக்கு அனுகூலமான துணையாயிருக்கவேண்டுமென்றும் போதித்தனர். சமண முனிவரில் ஒருவர், "ஒருவர்பொறை இருவர் நட்பு" என்றார். பவுல் என்னும் மகாமுனிவர் தமது நூல்களில், நீடிய பொறுமை, நீடிய சாந்தம், நீடியதயை இவை மிகவும் தேவையெனப் பலமுறை எழுதினார். ஸ்ரீ கிறிஸ்து பகவான் 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்' என்றும், 'ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையுந் திருப்பிக்கொடு' என்றும் திருவாய் மலர்ந்தருளினார். "சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என்பது நாம் யாவரும் அறிந்தமுதமொழி. "பொறுத்தார் பூமியாள்வார்" என்பது நமக்குள் வழக்கான ஒரு பழமொழி. 'சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்' என்னும் மறைமொழி அப்பழமொழியை ஒத்ததாகும். உத்தமர் சொல்லிய இந்த நீதிமொழிகளையும், ஒப்புயர்வற்ற அந்த வேதமொழிகளையும் பலர் தொன்றுதொட்டு அநுசரித்து, பகைவரது அக்கிரமங்களைப் பொறுத்துப் புகழ்பெற்று வாழ்ந்தனர். அவர்கள் அங்ஙனம் பொறாவிடின், இவ்வுலகம் ஓயாத சமர்க்களமாகவே இருக்கும். அடிபிடியும் சண்டை சல்லியமும், உக்கிரமும் அக்கிரமமும் மிதமிஞ்சிப்போம்.

பெரியோர் தங்கள் சாதனையினால் பொறையுடைமையை விளங்கக் காட்டியிருக்கின்றனர் என்பதை நாம் சரித்திரங்களி

களிலும் புராணேதிகாசங்களிலும் பிறநூல்களிலும் பார்க்கக் காணலாம். துரியோதனாதியர், தமக்கும் தம் அருமைத் தம்பியர்க்கும் பலதடவைகளில் இன்னல்விளைத்தபோது, தருமர் தருமோபதேசஞ் செய்துவந்ததுடன் அவர்கள் செய்த தீமையாவையும் முற்றிலும் பொறுத்துக்கொண்டனர். அவர் பொறுமைக்கு உறைவிடமாயிருந்தார் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. கிரேக்க ஞானியாகிய ஸாக்கிரட்டிஸ் என்பவர், தம்மைத் தூஷித்து வம்புதும்பாய்ப் பேசின சந்திப்பியாள் என்னும் தம் மனைவியை இம்சிக்கவோ சிக்ஷிக்கவோ பக்ஷிக்கவோ செய்யாது, அரிய பொறுமையுடன் அவளை அன்பாய் நடத்திவந்தார். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" எனப்படும் உத்தம பத்தினியின் கற்குணத்திற்கு முற்றுமாறாக அவள் நடந்துகொண்டபோதிலும், அவர் அதைச் சட்டைசெய்யாமல் பொறுத்துவந்தார். சாந்த மூர்த்தியாக அவதாரஞ்செய்த எம்பெருமான் தம்மைப்பிடித்து அடித்துச் சக்கந்தம்பண்ணித் தூஷித்தவர்களை எதிர்க்கவோ அவர்களிடம் பழிவாங்கவோ விரும்பவில்லை. தம்மைக் கொல்லும்படி கங்கணங்கட்டிக்கொண்டு நின்ற சத்துருக்களுக்கு மன்னிக்கவேண்டுமென்று வெகு ஊக்கமாய் வேண்டிக்கொண்டார். "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் அவர் தம்முடைய வாயைத் திறக்கவில்லை". "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும் இருந்தார்". அவர் பொறுமையில் இணையற்றவராய் விளங்கினார். ஸ்தேவான் என்னும் பக்தசிகாமணி தம் ஜீவன் பிரியுமுன், நிர்நிமித்தமாகத் தம்மைக் கல்லெறிய நின்றவர்களுக்காக, முழங்காற் படியிட்டுக் கடவுளை நோக்கிப் பணிவோடு 'பகவானே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்' என வேண்டிக்கொண்டார்.

> "தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
> றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
> எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
> பரிவதூஉஞ் சான்றோர் கடன்"

சீனாவில், பாக்ஸர் யுத்தத்தில் வன்கொலையடைந்த கிறிஸ்தவ போதகசிகாமணிகள் பலருடைய பிள்ளைகள், வளர்ந்து தாமும்

போதகராய், தங்கள் மாதாபிதாக்களைப் பதைபதைக்க வதைத்துக் கொன்றவர்களிடையிற் போய், அத்துரோகிகளுக்காகத் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்கின்றார்கள்.

> "பொறுத்த லிறப்பினை யென்று மதனை
> மறத்த லதனினு நன்று"

பழிக்குப் பழிவாங்காமல் பொறுத்தல் நன்று; அதனை மறத்தல் அதைப்பொறுத்தலினும் நன்று. மெய்ப்பொருணாயனார் முத்தநாதனை வணங்கும்போது, அவன் தன் வஞ்சகக் கவளிகையில் மறைத்துவைத்த உடைவாளை எடுத்து அவரைக்குத்தத் தத்தன் என்பான் தன் கைவாளினால் அப்பகைவனை வெட்டப்போனான். உடனே மெய்ப்பொருணாயனார் "எம்பிரானடியார் போக—மீ திடைவிலக்காவண்ணங் கொண்டுபோய் விடு நீ" என்றாராம். 'இவனுக்கு ஒரிடையூறுஞ் செய்யாதே, வழியிலே இவனுக்கு யாவரொருவரும் இடையூறு செய்யாதபடி இவனை அழைத்துக் கொண்டுபோய்விடு' என்று சொன்னதாகப் பெரியபுராணத்தில் சொல்லியிருக்கிறது. இவ்விதமாக உத்தமர் பலர் தங்கள்போதனையினாலும் சாதனையினாலும் உலகம் பயனடையும் பொருட்டுத் தீமைக்கு நன்மை செய்து வாழ்ந்தனர். அவரது சிறந்த முன்மாதிரி எவரும் போற்றிப் பின்பற்றத்தக்கது. "பெரியார் அரிய பொறுப்ப"

பெரியோர் தம் பொறுமையினால் மேலான வேதனம் பெற்றுள்ளார். அவர் பயன்தூக்கிப் பொறுமையாயிருந்தவரல்லர். ஆயினும் அவர் நற்பயன் பெற்றவரே ஆவர். பொறுத்தாரை எவரும் மதிப்பர். அவர் எவ்வெவர் நேசத்தையும் உள்ளன்பையுங் கவர்ந்துகொள்ளுவர். அவரைப்பற்றி எவரும் புகழ்ந்து பேசுவர். அவர் புகழ் என்றும் நிலைநிற்கும்.

> 'ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
> பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து'.

பிறர் செய்த தீங்கை பொறாது பதில் தீங்குசெய்தவர் சிறிது நேரம் சந்தோஷம் அடைவர். அவர் கொஞ்சப் பொழுது திருப்தியுடையவராய் இருப்பர். அந்தத் திருப்தியும் சந்தோ

ஷமமோ அதிதுரிதமாய்த் தேய்ந்து மாய்ந்து போயும் பிறர் செய்த தீங்கைப் பொறுத்தவரோ என்றும் திருப்தி சந்தோஷமும் உடையவராயிருப்பர். தாம் பொறுத்ததின் நிமித்தம் பின் மனஸ்தாபப் படுவதற்கு இடமிராது.

'ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்'

"நீ தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு" என்பது வேதவாக்கு.

'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்'

என்பது திருக்குறள். இவ்விரண்டும் தம்மில் ஒத்திருக்கின்றன. அன்புக்குமுன் வம்பு நில்லாது என்பதை விளக்க ஹுவிட்டியர் (Whittier) என்னும் வரகவி, இந்திய கதை ஒன்றை ஆதாரமாகக் கொண்டு வெகு இங்கிதமாய்ப் பாடியுள்ளார். அதின் சாரமாவது:—காருண்யநிதியும் பரிசுத்தருமான புத்தமகருஷி கருணையுடன் நடந்து செல்கையில், கோரத்தோற்றமும் மிகப்பருமனுமுள்ள ஒரு ராட்சதனைச் சந்தித்தார். அவனது அதி பயங்கரமான சத்தம் மலைகளையும் வனங்களையும் கிடுகிடுக்கப் பண்ணிற்று. அவன் புத்தரைப்பார்த்து "சமாதான மூர்த்தி! உண்மையில் நீரே வென்றுகொண்டீர்; அன்புக்கு முன் வம்பு நிற்குமா? "என மொழியவும், நிராயுதபாணியான புத்தர் சித்தங்கலங்காது சினங்கொள்ளாது அவ்வசுரன்மேல் கருணைகூர்ந்து "அடா, அரக்கா! உனக்கு நான் அன்பன் உன்னையும் நான் நேசிக்கிறேன்" என்றார். எனலும், அவனால் உண்டான பனையளவான பயங்கரம் தினையளவாயிற்று. ஆகாயமளாவிய அவன் ரூபம் அங்கை யளவானது. அவ் வசங்கிதப் பொருள் புருவின வடிவமாயிற்று. பேரிடி முழக்கினவிடத்தில் பறவை வட்டமிட்டு இனிமையாய்ப் பாடியது.

'Hate Hath no harm for love' so ran the song
And peace unweaponed conquers every wrong'

'பகையானது நேசத்தை மோசஞ் செய்யாது
நிராயுத சாமோபாயம் எத்தீமையையும் வெல்லும்"

என்பது அந்தப்பாட்டாம். அதனால் பொறுமை பிறக்கும். பிறந்து தீமையை நன்மையாகவும், பகையை நட்பாகவும்,விரோதத்தைப் பட்சமாகவும், குரூபத்தைச் சரூபமாகவும மாற்றிவிடும். பொறுமைக்கு இதினும் மேலான நற்பயன் வேண்டுமோ?

'இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம்
ஒறுக்கும் மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை'.

தற்கால நிலைமையும் கட்டாயக்கல்வியும்

(புரொபெஸர் I. Y. G. நாடார் B. A., L. T.)

(தொடர்ச்சி)

ஆகவே, நம் நாட்டார் மேலான ஸ்தானங்களுக்கு வருவது எப்படி? மேலான இடம் நமக்கு வேண்டுமானல் நம்மை அதற்குத் தகுதியாக்குகிறதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது கல்வியே. இந்தியாவிலுள்ள கல்விக்கும், இங்கிலாந்து,பிரான்ஸ் ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களிலுள்ள கல்விக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. எப்படி என்றால், அத்தேசத்தார் அறிவை உண்டுபண்ணுகிறவர்களா யிருக்கின்றார்கள். நாம் அவர்கள் உண்டுபண்ணுகிற அறிவைப் படிக்கிறவர்களா யிருக்கிறோம். அவர்கள் பூமியையும், ஆகாயத்தையும், வானலோகத்தையும், அவற்றிலுள்ள சகல தத்துவங்களையும், அவற்றின் பிரமாணங்களையும், கருவிகளைக்கொண்டு மிக நுட்பமான பரீட்சை செய்து, நாடோறும் நூதன காரியங்களைக்கண்டுபிடித்து, மறைவாய் இருந்தவைகளை வெளிக்குக் கொண்டுவருகின்றார்கள். நாம அவர்கள் கண்டுபிடிக்கிறவைகளைப் பற்றிப் படிக்கிறோம். அவர்கள் அறிவை உண்டுபண்ணி அவ்வறிவின்படி சாதிக்கிறவர்களா யிருக்கிறார்கள். நாமோ அறிவையல்ல, அறிந்தவைகளைப்பற்றி மாத்திரம படிக்கிறவர்களா யிருப்பதால், அதன்படி செய்யத் திராணியற்றவர்களா யிருக்கிறோம். இந்தியாவிலுள்ள கல்வி மிகவும குறைவான கல்வி. இனனும் சில

நூற்றாண்டுகளுக்கு இந்தியாவின் கல்வி இப்போதிருக்கிற ஸ்திதியிலேயே இருந்தால், நாம் நூற்றுக்கு நூறுபேர் படித்தவர்களாயிருந்தாலும், ஐரோப்பியர், ஜப்பானியர், அமெரிக்கர் முதலானவர்களுக்குக் கீழான ஸ்திதியில இருப்பதற்கு அருகரே ஒழிய, இந்தக்கல்வியால் அவர்களுக்குச் சரிசமானாக வர நம்மால் இயலாது. இந்தியாவில் நமக்குக் கிடைக்கக்கூடிய கல்வி எல்லாம் ஐரோப்பிய ஜப்பானிய கல்வியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எட்டுச் சுரைக்காய்க்குச் சமானம். இந்த எட்டுச்சுரைக்காயை வைத்துக்கொண்டு நான் பி. ஏ., நான் எம்.ஏ., நான் பி. எல்., நான் எம். எல் என்று பெருமை பாராட்டுகிறது வெட்கம்! வெட்கமே!! எழுபது வருஷமாய் நமது நாட்டில் யூனிவர்சிட்டி ஸ்தாபகம்பண்ணியும் நமது பி. ஏ. எம். ஏ.-க்களுக்கு ஒரு பொம்மை செய்யத் தெரியுமா? ஒரு விளையாட்டுக் கடிகாரம் செய்யத் தெரியுமா? ஒரு விளையாட்டு யந்திரஞ் செய்யத் தெரியுமா? அல்லது ஒரு காதில்லாக் குண்டூசி செய்யத்தெரியுமா? ஒரு காலத்தில் உலகங்களுக்கெல்லாம் ஒளிகொடுத்த இந்த நாட்டிற்கு இது வெட்கக்கேடாகும்! கல்வி என்பதை மானிட ஜீவியத்திற்கு ஆயத்தப்படுத்தும் கருவி என்று உலகத்தில் முதல் ஸ்தானத்திற்கு வந்திருக்கும் தேசத்தார் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஜப்பானியர் ஐம்பது வருஷங்களுக்கு முன் நமக்குக் கீழ் ஸ்தானத்திலிருந்து இப்போது நமக்கு மேல் வந்த காரணம் என்ன? தங்கள் கேவல ஸ்திதியை அவர்கள் அறிந்தவுடன் தங்களில் படிப்பில் விருப்பமுள்ளவர்களை எந்தெந்தத் தேசத்தில் எந்தெந்தவிதமான கல்வி பூரணமாயிருந்ததோ அந்தந்த தேசத்திற்குத் தொகுதி தொகுதியாய் அனுப்பினார்கள். சிலர் இங்கிலாந்துக்கும், சிலர் பிரான்சுக்கும், சிலர் ஜெர்மெனிக்கும், சிலர் அமெரிக்காவுக்கும் போய், அங்கங்கே உள்ள கல்வியையும் தொழில் சாஸ்திரங்களையும் அத்தேசத்தார் படிக்கிறவண்ணமே படித்து, அப்படிப்பையெல்லாம் ஜப்பானுக்குக் கொண்டுவந்து அங்கே நிலைநிறுத்தினார்கள். இதனால் பத்து இருபது வருஷங்களுக்குள் ஜப்பானும் இங்கிலாந்து தேசம் போலாயினது. இதன் பலனை அறிந்த சீனதேசத்தின் பிரபுக்கள் அநேகர் தங்கள் பிள்ளைகளை இங்கிலாந்துக்கு அனுப்பி சிறு வகுப்பிலிருந்தே

அங்கு படிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களும் ஜப்பானியரைப்போல சீக்கிரம் முன் வருவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நமக்கும் ஐரோப்பியர் ஜப்பானியருடைய நாகரீகமே முன்மாதிரியாயிருக்கவேண்டும். அவர்களைப்போல நாமும் முன் வரவேண்டுமென்றால், நம்முடையவர்களில் புத்திக்கூர்மையும் நல்லொழுக்கமுமுடைய மாணாக்கரை இங்கிலாந்து ஜப்பான் முதலிய தேசங்களுக்கு அனுப்பி, அங்குள்ள கல்விகளையும் தொழில்களையும் நம் நாட்டில் கொண்டுவந்து நிலைநிறுத்தவேண்டும். நம்முடையவர்களை அப்படி அனுப்புவதற்குத் துரைத்தன சகாயத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. தமிழ் நாட்டில் ஒரு பொதுநிதி ஏற்படுத்தி, அதிலிருந்து இங்கிலாந்து ஜப்பான் ஜெர்மெனி முதலிய தேசங்களுக்குப் போகவிரும்பும் மாணாக்கர்களுக்கு உதவிபுரிந்து, அவர்கள் முன் வந்தபின் கொஞ்சம் கொஞ்சமாய் முன்செலவு செய்த பணத்தைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளலாம். இதுவும் தவிர நம்மில் இளைஞராயும் விசேஷித்த புத்திசாலிகளாயுமிருப்பவர்களை ஐ. சி. எஸ். பரீட்சையில் தேறவும், அவர்கள் கலெக்டர்கள் ஜட்ஜ்களாக வரவும் செய்வதும் அவசியம். நம்முடையவர்களில் அநேகர் கலெக்டர் ஜட்ஜ்கள் முதலான உயர்ந்த உத்தியோகஸ்தர்களாய் இருப்பார்களானால் நாம் கோருகிற காரியம் எளிதில் முடியும்.

இத்தோடே இங்கிலாந்தில் செய்கிற சகல கைத்தொழில்களையும் நமது நாட்டிற்குக் கொண்டுவந்து நிலைநிறுத்தவேண்டும். கல்கத்தா நகரத்திற்கு பக்கத்திலிருக்கும் சக்ஷி என்னும் இடத்தில் டாட்டா என்பவரின் இரும்புத் தொழில்சாலையில் இன்சின், ரெயில், கர்டர் முதலிய சகல தொழில்களும் சித்தியோடு நடந்துவருகின்றன. மைசூரிலும் இதேவிதமாய் ஒருவாறு நடத்துகிறார்கள். நம்முடையவர்களையும் மற்றத் தேசங்களுக்கு அனுப்பி, இரும்புத் தொழிலைநடத்தும் பர்மிங்கம் ஷெவ்வீல்ட் என்னும் பட்டணங்களையும், நூல்வேலை நெசவு வேலை செய்யும் மான்செஸ்டர் பட்டணத்தையும், ஜப்பானியர் தங்கள் தேசத்திற்குக் கொண்டுபோனது போலவும், டாட்டா என்பவர் சக்ஷிக்குக் கொண்டு வந்ததுபோலவும், நாம் இத்தொழிற்சாலை பட்டணங்களை நம் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். இது

நம்மவர்களுக்குக் கூடாத காரியமல்ல. ஏனென்றால் மற்றவர் செய்யத்திராணியில்லாத அநேக காரியங்களைச் செய்துமுடிக்கும் புத்தியும் விடாமுயற்சியும் நம்மவர்க்கு உண்டு. கடற்பிரயாணம் செய்ய மற்றவர்கள் அஞ்சினாலும் நம்மவர்கள் துணிந்து கடல் கடந்து உலகமெல்லாம் பரவியிருக்கிறார்கள். நாம தீர விசாரித்து அறிந்தமட்டில் உலகத்தில் இந்தியர் இல்லாத விசேஷித்த பட்டணங்களில்லை. இந்தியாவுக்கு வெளியே இங்கிலாந்திலும் பிரான்சிலும் ஜெர்மெனியிலும் சென்றயுத்தத்திற்கு முன்னமே தமிழர்கள் போயிருக்கிறார்கள. அமெரிக்கா, ஆப்பிரிக்கா தென்சமுத்திர தீவுகளிலும, சீனாவிலும், சொல்லவேண்டுமானால், இப்பூமியில் விசேஷித்த பிரதேசங்களிலெல்லாம் நம்முடையவர்களிருக்கிறார்கள். இவ்வகை முயற்சியுடையோர் செய்யக்கூடாத காரியம் யாது? எக்காரியங்களையும் ஆகப்பண்ணக்கூடிய சக்தியும் லக்ஷணங்களும் நம்மிடமிருப்பதால, நம்மைப் பிடித்திருக்கும் நித்திரையை விட்டு எழும்பி, நம்மவர்க்குள்ளிருக்கும் உட்பிரிவுகளையும், சமய வேற்றுமையையும அறவேயொழித்து, ஒற்றுமையைக் கைக்கொண்டு, நாம் முன் வருவதற்கான காரியங்களைத தாமதமில்லாமல் உடனே செய்யவேண்டும் பிற்காலத்தில் நாம் எவராலும் கண்ணியமாய் எண்ணப்படுவதும், அல்லது கனவீனமாய் எண்ணப்படுவதும், தற்காலத்தில் பெரியோரால் சொல்லபபடுகிற ஆலோசனையினபடி நாம் செய்கையாலும் செய்யாமையாலுந்தான ஆகும். இதைப் பெரியாரும் "எழுத்தறியத் தீரும் இழிதகைமை" எனக்கூறி வற்புறுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, இனி ஒவ்வொருவரும தம் தம் காரியங்களை மாத்திரம் கவனித்துக்கொண்டிராமல், இந்திய குலமாகிய பெரிய குடும்பத்தின அவயவங்களாகிய மறறவர்களுடைய காரியங்களையும தம காரியங்களாக நினைத்து, பொதுஜன நன்மையையே கருதுவார்களானால், நம்முடைய தேசத்தைப்போல் மேன்மையான தேசம் வேறொன்றும இருக்காது.

இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி
யெழுந்தா லன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற்
கண்போல் யாரும்

பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலும் நற்கேள்வி
பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மைவிடுந்
தெரியா வன்றே.

தற்காலக்கல்வியும் தமிழின் நிலைமையும்

(ஸ்ரீமான் J. S. பொன்னையா நாடார், பி. ஏ. வகுப்பு மாணவர், திருச்சி)

(தொடர்ச்சி)

தமிழை அபிவிருத்திபண்ணும் வழிவகைகள்:—

புதிய நூல்கள் பல வெளியிடுவதைப்பற்றி முன்னே கூறினோம். புதிய நூல்கள் வெளியிடுவதைக் காட்டிலும் அவசியம் செய்யவேண்டுவது நமது மொழியின் இலக்கண இலக்கிய நூற்களைப் பெருகப்பண்ணுவதே. ஆங்கில பாஷையில் செய்யப்பட்டிருக்கும் வண்ணம் நாமும் செய்வோமானால் நமது மொழி பன்மடங்கு விருத்தியடையும். தமிழ் மொழியின் சரித்திரம் (History of the Tamil Language) தமிழ் இலக்கிய சரித்திரம் (History of the Tamil Literature) இவைகளை விரிவாய் எழுதப்புகுந்தார் இலர். எழுதியவரும் ஆங்கிலபாஷையிலுள்ளவைகளைப் போன்று எழுதினாரல்லர். ஆதலின் இவ்விரண்டிலும் பலர் முயற்சி செலுத்தி எழுதுவது அவசியம். மேலும் தமிழ்ச் செய்யுட் சரித்திரம் (History of the Tamil Poetry) தமிழ் இலக்கண சரித்திரம் (History of the Tamil Grammar) எழுதப்படவேண்டும். ஆங்கிலத்தில் இருப்பதுபோல ஒவ்வொரு பதத்தின் தோற்றத்தையும் காரணத்தையும் விளக்கும் (Etymological Dictionary) சொல்விளக்க அகராதிநூல்கள் எழுதல் வேண்டும். இவ்வளவு காலமாகியும் நமது தமிழ் ஜனங்களுடைய சரித்திரத்தையேனும், தமிழ் அரசர்களுடைய சரித்திரத்தையேனும் ஆராய்ந்து எழுதினவர் இல்லை. சோழவம்ச சரித்திரம் மாத்திரம் ஒரு சிறிது வெளிவந்தது. மற்றைய அரசர் சரித்திரத்தை ஆராய்ந்து எழுதப் போதிய சாதனங்கள் இருந்தபோதிலும், இம் முயற்சி

யில் தலையிடுவாரைக் காணேம். கீழ்க்காட்டியவை யாவும் அவசியம் செய்யப்படவேண்டுவனவாம்.

நமது மொழியில் ஆங்கிலபாஷையிற்போல உரைநடை நூற்கள் (Prose Literature) நவீனக நூற்கள் (Novel) நாடக நூற்கள் (Drama) கடிதங்கள் (Diary, Memoirs, Letters) முதலானவை கிடையா; செய்யுளும், இலக்கணமுமே நிறைந்துள்ளன. முதலாவது நமது நூற்களை எற்றபிரகாரம் ஒரு ஒழுங்கின்படி பதிப்பிக்கவேண்டும். புத்தக வுரிமை (Copyright) யுள்ளவர்களாவது பின் வருமாறு பதிப்பிப்பார்களானால் நலமென்று தோன்றுகிறது. Academy, Classics, Literature series, Student's series, Little Masterpieces series, Minor Epics series, Religious Classics series), Everman's Library, Golden Treasury. இப்படிச் செய்வதினால் பலரும் எளிதாக வாங்கி வாசித்தறிய இடமுண்டாகுமென நம்புகிறேன்.

பல பழைய நூற்களுக்கு முற்காலத்தோர் செய்த உரைகளே உள்ளன. அவை மாணுக்கர் எளிதில் பொருள்கொள்ள இயலாதனவாயிருக்கின்றன. இக்காலத்திய பண்டிதரேனும் அவைகளை எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்க முறையில் வெளியிடல் அவசியம். பகவற்கீதை முதலானவைகளுக்கு, உரை எழுதக்கூடாதென்ற வீண் கொள்கையுடையவர் போல் நாம் வாளாவிருப்பது நன்றன்று. ஆங்கில பாஷையில் நூற்பெருக்கத்திற்குக் காரணமும், அந்நூற்களின் பெருமை வெளியே நின்றுஉலாவும் சாதனமுமாக இருப்பது, இவ்விதமாக முகவுரை விரிவுரையுடன் விளங்கும் நூற்களே. Shakesperian Criticism இல்லாவிட்டால் ஷேக்ஸ்பீயரின் கவனசக்தியையும் கற்பனலங்காரத்தையும் ஒருவரும் உணரார். பத்துவரிகளடங்கிய ஒரு செய்யுளுக்கு தற்காலத்து உரையாசிரியர் அறுபதுபக்க முகவுரையும் இருபது பக்க விரிவுரையும் எழுதி வெளியிடுகின்றனர். நமது பழந்தமிழ் நூலுக்கும் அங்ஙனம் செய்வோமானால், எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாதென்றே சொல்லல்வேண்டும்.

ஆனால் நமது இலக்கண விலக்கிய நூற்களின் சம்பந்தமாகப் பின் வரும் முறைப்படி நூற்கள் எழுதப்படல் அத்தியாவசியம்:

சரித்திரசம்பந்தமான நூல் (Historical Literature) தொகுதியில், தமிழரசர், தமிழ்வீரர், தமிழ் ஜனங்கள் இவர்களைப் பற்றிப் பல புத்தகங்கள் எழுதலாம். மேலும் இலக்கிய நூற்கள் சம்பந்தமாக Literary studies, Studies in Literature, Transennets and Studies, Views and Reviews, Studies in Poetry and Philosophy முதலியனவும், ஒவ்வொரு முக்கியமான கவியினுடைய காலத்தையொட்டி (The age of Tholcappiar) தொல்காப்பியர் காலம், கடைச்சங்க காலம், கம்பர் காலம் என, சில ஆங்கில கவிஞரைப்பற்றி எழுதும் பிரகாரம் எழுதலாம். இலக்கண நூற்கள் சம்பந்தமாக The Tamil Grammatic Literature, Studies in Tamil Grammar, A History of the Tamil Prosy, Development of Tamil Grammar, Tamil Grammar & Tamil Literature. முதலான பல நூல்கள் வெளியிடலாம். இவையாவும் ஆராய்ச்சி முகத்தாற் செய்யப்படவேண்டியவை. இவையன்றி நமது புலவர்களைப்பற்றியும் புதிய நூற்கள் தோன்றல் அவசியம். ஜான்ஸன் என்னும் ஆங்கில பண்டித சிகாமணியைப் போன்று (Lives of the Poets) புலவர் சரித்திரம் எழுதுவார் யார்? மார்லி துரை மகனுரைப்போல (English men of Letters) புலவர் வரலாறு வரிசை எழுதுவோர் பலர் வேண்டும். Essays on the Poets, Essays Biographical and Critical என்னும் ஆங்கில நூற்களைப்போலத் தமிழ்ப் புலவர்மேல் வியாசங்கள் பல வரைதல் வேண்டும், ஸ்டீவென்ஸன் புத்தகத்தைப்போலவும் (Familiar Studies in Men and Books) பல நூல்கள் வெளிவரல் அவசியம். அன்றியும் அர்னல்டு என்பவர் எழுதிய (Essays in Criticism) இலக்கிய வாராய்ச்சிப் பாடங்கள் போன்று பல வியாசங்கள் எழுதினால் நமது மொழியின் பெருமை விளங்கும். இதுகாறும் இப்பெரும் முயற்சியைத்தொடங்கினாரைக் காணோம் நமக்கு முன்னிருக்கிற வேலையோ மிகப்பெரிதும் பாரமுமானது. தளரா ஊக்கமும், பொறுமையான உழைப்பும் மிகுந்த பலனைக் கொண்டுவருமென்பதற் கையமில்லை. தமிழ் மொழியின் பெருமையும் அழகும் புதைக்கப்பட்டிருக்கிற ஒரு புதையல்போன்று மங்கிக்கிடக்கிறது. தமிழபிமானிகள் கடமை இப்புதையலைத் தோண்டி எடுப்பதே.

நமது இலக்கிய நூல்கள் (Literature) அபிவிருத்தியடையுமாறு காட்டிய முறைமைகள் இன்னும் விளங்குமாறு ஒரு புலவர் மாட்டு எடுத்துக்காட்டி நிறுத்துகிறேன். கம்பரை எடுத்துக்கொள்வோம். நம்மிடத்தில் கம்பராமாயணம் மூலம் உண்டு; அதற்கு உரையும் உண்டு. சாஸ்வதியந்தாதியும் சடகோபரந்தாதியும் உள்ளன. சில தனிப்பாடல்களுக்கு உரை பெரியோர் நாவில்மட்டுமே நிலவுகின்றது. இவையன்றிக் கம்பரைப்பற்றிய நூல்கள் கிடையா. சிலர் இரண்டொரு நூல் எழுதியுள்ளார். அவை அரைகுறையானவை. இதைத்தவிர வேறு கிடையா. கம்பர் ஒரு ஆங்கில கவிஞராயிருந்திருப்பாராயின், கம்பரைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் கம்பர் செய்த நூற்களைக்காட்டிலும் நூறுமடங்கு அதிகமாயிருக்கும். பின் வருமாறு எண்ணிறந்த நூற்கள் வெளிவந்து நிற்கும். Kambar as a Poet; Kambar as a Man; Kambar & His Art; Life and Times of Kambar; A critical Study of Kambar; The Mind of Kambar; Humour in Kambar; Tales from Kambar; Lectures on Kambar; Studies and Appreciations in Kambar; The Genius of Kambar; An Introduction to the Study of Kambar; A Hand book to the works of Kambars; The Poetry of Kambar; Kambar's Lexicon; Kambar's concordance; Kambar's Grammar; Kambars & his contemporaries; The age of Kambar. ஒவ்வொரு கவியைப் பற்றியும் இங்ஙனம் செய்வோமானால் நமது மொழி உலகத்திலுள்ள பெரிய பாஷைகளில் ஒன்றென யாதொரு ஆட்சேபமுமின்றி யாவராலும் ஒப்புக் கொள்ளப்படும்.

(தொடரும்)

இந்தியரும் கல்வியும்

(சாவற்கிணறு. ம. ஏ. தேவசகாயனாடார், கொழும்பு.)

நமது இந்தியா தேசமானது பலவளப்பங்களிலும் குறைவின்றியிருந்தபோதிலும், நம் முன்னோர்கள் எழுதிவைத்துச் சென்ற அருமை பெருமையான பல விஷயங்களை வாசிக்கும் போதும் நினைக்கும்போதும் ஒருவாறு மனதில் கிளர்ச்சியுண்டாகும் என்பதற்கு ஐயமில்லை. நாகரீகத்திலும் செல்வத்திலும்

மிகுந்திருப்பதாகப் பறைசாற்றித்திரியும் மேல்நாட்டார், இந்தியரின் கொள்கையையும் இந்தியமஹான்களின் சரித்திரத்தையும் பகுத்தறியப்புகின், நாணமடைந்து தலைகுனியா நிற்பரென்பதை யான் ஈண்டுக் குறிப்பிடவேண்டுவதில்லை. இப்பிரபஞ்சத்தில், கற்பென்னும் உத்தமி நடமாடும் நம் இந்தியாவில் கல்வி இல்லாக்குறையே பெருங்குறையாயிருக்கிறது. அக்குறையை அறவே யொழித்தால் நம் இந்தியநாட்டிற்குச் சமானமாக எத்தேசமுமில்லை என்று இக்காலத்திலும் நாம் வாய்கூசாமல் சொல்லலாம். சில கனவான்கள் "படிப்புத்தான் சாப்பாடு கொடுக்கின்றதோ?" என்கிறார்கள். என்ன விந்தை! படித்துவிட்டு யாசகந்தண்டினாலும் அதன் மகத்துவம் வேறுதான். இன்னுஞ்சிலர் "நான் தரித்திரனாயிருக்கிறேன். என் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பினால், ஜீவனஞ்செய்ய முடியாது. ஏழைகளுக்குப் படிப்பேன்?" என்கிறார்கள். அந்தோ! என்ன விபரீதம்! பிள்ளைகள் பன்னிரண்டு வயதிற்குமுன் என்ன சிறந்த வேலை செய்வார்கள்? எத்தனை ரூபாய் சம்பளம் வாங்கிவிடுவார்கள்? "பிச்சைபுகினுங் கற்கைநன்றே" என்பதை மறந்துவிடலாகாது. கல்விச்செல்வம் மட்டுமே ஒவ்வொருவருக்கும் சொந்தம். எத்தனைபேருக்குப் பங்கிட்டுக் கொடுத்தாலும் குறையாது. கள்வர் பயமில்லை. நாம் சாகும்போது நம்முடன் கூட வருவது கல்வியே. "கல்வியழகே அழகு" என்பது நமது ஞாபகத்திலிருக்கவேண்டும்.

நாம் படிப்பதும், பணஞ்சம்பாதிப்பதும், புத்திரசந்தானமடைவதும், பெருமை பெறுவதும் சுயநலத்திற்கல்ல; நம் இந்திய மாதாவின் நலத்திற்கும் தேசமுன்னேற்றத்திற்குமேயாம். தாய் தந்தையர்களே! உங்கள் பிள்ளைகளைக் கல்வி பயில வைத்துத் தேசமுன்னேற்றத்திற்காக உழைத்து இந்தியமாதாவின் புகழைப் பெருகச்செய்யுங்கள். நம் தேசம் முன்னேற்றமடைய அண்ணலாம் பரமன் தண்ணருள் புரிவார்.

செல்வம் நிலையாமை

(காவற்சிணறு ஸ்ரீமான் பி. ஞா. ம. இருதய நாடார், கொழும்பு)

(முன்றொடர்ச்சி)

உண்மைவழி நடவாதவன் கையில் செல்வம் சிக்குண்டதும் அது அவன் பெரியாரை அவமதிக்கச் செய்கிறது. தனக்கு நிகராக ஒருவருமில்லை என்று காட்டும்படி செய்கிறது. அகங்காரத்தை உற்பத்தியாக்குகிறது. தீயகுணங்களுண்டாகின்றன. இம்மட்டுமா? அசத்தியவானிடம் சிக்குண்ட செல்வம், சூதுக்கும், வாதுக்கும், கூத்துக்கும், வேசைக்கும், மதுபானத்துக்குமே பயனபடுகிறது. சுருங்கச் சொல்லுமிடத்து, செய்யத்தகாதென்று பெரியோர்களால் விலக்கப்பட்டிருக்கிறவைகள் எவைகளோ அவைகளையெல்லாம் செய்யும்படி ஏவுகிறது. அத்தகையோனின் மனம் என்ன சொல்கிறது? "ஓ! நான் இந்தக் காரியம் செய்துவிட்டால் என்னை யார் என்னசெய்யமுடியும்?" என்கிறது. அத்தகைய செல்வமுள்ளவன் தான் ஏதாவது செய்ய முற்பட்டால் 'டணமிருக்கிறது, பார்க்கலாம் ஒருகை!' என்று நினைத்துக்கொள்கிறான். அத்தகைய சகோதரனிடம் ஓரே ஒருகேள்வியை மாத்திரம் கேட்க விரும்புவோம். அதாவது 'நண்ப! எவ்வளவு காலம் உன் செல்வம் நீடிக்கும்?' என்பதே. இவ்வித எண்ணமுள்ள நண்பன்,

> "பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
> உருத்தெரி யாமலே ஒளிம ழுங்கிடும்"

என்பதைப்போல், பெற்றோர், உற்றோர், பெரியோர், குருக்கள் இவர்களுடைய புத்திமதிகளுக்குச் செவிசாய்க்காது, புதிய கிளர்ச்சியுடன் ஒழுகுவன். அதற்கு முன் அவனுக்கு அந்த விதமான குணம் இருந்திருக்கமாட்டாது. பாழும் நிலையற்ற செல்வம் போய் மனிதனையுமல்லவோ புதிய நிறமுங் குணமுமுள்ளனாக்குகிறது! இப்படியும் மனிதர் நடக்கமுடியுமா? என்பீர்களோ? ஆம், அஃதுண்மையே! இவர்களை நம் நடுவில் இன்றும காணலாம், இவர்கள் எண்ணம் என்ன என்று பார்த்தால், தங்களது செல்வம் ஒருபோதும் குறையாதெனும்

எண்ணுந்தான். இதுவே இவ்வித கோலாகலங்களை எல்லாம் செய்கிறது. இவர்களே விளக்கைப் பிடித்துக்கொண்டு, கிணற்றில் விழுகிறவர்கள். இவ்விதம் உருக்குலைந்தோர் சரியான ரூபம் அடையவேண்டுமானால்,

'மருந்துள நோவெனில் வாகடத்திலை
தரித்திரம் என்னும் ஓர் மருந்தில் தீருமே'

அவர்கள் சுயரூபம் பெற தரித்திரந்தான் மருந்தாகும். ஆகையால் தனவந்தர்களாயுள்ளவர்கள் நினைக்க வேண்டுவதொன்றுண்டு. செல்வம் நிலையாது என்றெண்ணி அச் செல்வத்தைச் சன்மார்க்கத்தில் பயன்படுத்தவேண்டும். ஏனெனில்,

'செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம்—எல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டுவிடும்.'

செல்வமோ தன் பெயருக்கேற்ற வேலையைச் செய்துகொண்டிருப்பதால் அதை யாம் நோவதிற் பயனில்லை. அச் செல்வத்தை வைத்து நடத்தும் மனிதன் மனப்படி அது ஒத்துநிற்குமே யொழிய அவன் மனதுக்கு விரோதமாக அது நிற்கமாட்டாது.

ஆதலால் தனவான்களே! உங்களது செல்வத்தை நல்வழியில் செலவழியுங்கள். குல முன்னேற்றத்துக்குச் செலவுசெய்யுங்கள். தேசமுன்னேற்றத்துக்குச் செலவுசெய்யுங்கள். பாஷை அபிவிர்த்திக்காகச் செலவுசெய்யுங்கள். கைத்தொழில் கற்பிக்க [illegible]ருங்கள். மூலையில் படுத்துறங்கிக்கொண்டு, நானும் தன[illegible] என்று கூறிக்கொண்டிருப்பதால் பிரயோஜனம் என்ன? [illegible]ன் பணத்தைச் செலவுசெய்ய வழிகாணாததால், எப்படியாவது போகட்டுமென்று நாங்கள் செலவழிக்கிறோம் என்பீர்களாக்கும். வேறுவழியில்லையா? குலமுன்னேற்றத்துக்கும் தேசமுன்னேற்றத்துக்கும் பாஷாபிமானத்திற்கும் எத்தனையோ பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. நீங்கள் அப்பத்திரிகைகளுக்குச் சந்தாதாராய்ச் சேர்ந்துவிட்டால், கெட்டுப்போவதென்ன? கேவலம் நாள் ஒன்றுக்கு அரைரூபாய் சம்பாதிக்கிறவன் கையில் முதலாய் ஆனந்தவிஜயன் பத்திரிகை ஆனந்த நர்த்

தனஞ் செய்கின்றதே. பத்துலக்ஷத்துக்கிருக்கும் ஐம்பது லக்ஷத்துக்கிருக்கும் என்று சொல்லிக்கொள்வது தான் மேன்மையோ? ஐரோப்பியர்களுடைய பழக்கங்களையும அவர்கள் செய்யும் காரியங்களையும் நாம் கவனிக்கமாட்டோம். ஆனால் அவர்களைப் போல் உடுக்கவும பேசவும் ஆசைப்படுகிறோம். கேவலம் நாலாயிரம் ரூபாய் ஒருவனிடம் இருந்தால், அதை வைத்துக்கொண்டு ஓர் ஷாப்பு, அதற்குக் கிளர்க்கு, பியூன், அக்கவுண்டண்ட், மேனேஜர் இவர்களை ஏற்படுத்தி, குறைந்தது ஐந்து குடும்பங்களைக் காப்பாற்றுகிறான். நீங்கள் எத்தனை குடும்பங்களைக் காப்பாற்றுகிறீர்கள்?

செல்வத்தை வைத்து என்ன செய்கிறீர்கள்? அந்தோ! சுவாமி விவேகானந்தரின் கூற்று உண்மையானதே! "நீங்கள் உங்களை இந்தியாவின் தனவந்தர்கள் என்று எண்ணவேண்டாம். நீங்கள் உயிருள்ள பிணமாயிருக்கிறீர்கள்" என்றார் அம்மகான்.

"அறுசுவை யுண்டி அமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று" என்பதாலும்,

"துகடீர் பெருஞ்செல்வம் தோற்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்" என்பதாலும்,

நாம் பகவான் நமக்குத் தந்த செல்வத்தை நல்வழியில் செ[illegible]வழிப்போமாக.

'ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.'

'பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்.'

'நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.'

விருந்தினரை உபசரித்தல்

(ஓர் இந்திய சகோதரி)

வீட்டுக்குவரும் அநேகர் பெண்மகளுக்கு அதற்குமுன் சற்றேனும் அறிமுகமில்லாதவர்களா யிருக்கலாம். ஆனால், அவர்கள் ஒருகால் புருஷனுடைய இனஜன பந்துக்களாயாவது அருமையான சிநேகிதர்களாயாவது இருப்பார்கள். ஆகையால், இல்லாள் அவர்களுடைய சம்பந்தத்தைக் குறிப்பினால் தெரிந்து கொண்டு, அவர்களை மிக அருமையாக ஏற்று உபசரிக்கவேண்டும். வீட்டிற்கு வருகிறதற்கு முன்னே அவர்கள் வருகையைப் பற்றிக் கடிதம் வந்ததும், கணவன் மூலமாய் அவர்களுடைய அருமை உரிமைகளையும், அவர்களுடைய குடும்பக் காரியங்களையும், மனைவி நன்றாய் அறிந்துகொள்ளலாம்.

பெண்மக்கள் அடிக்கடி பிரயாணஞ்செய்வதில்லை. ஆண்மக்களே பலதடவை பிரயாணம் செய்கின்றார்கள். அச்சமயங்களில், அவர்கள், இனஜன பந்துக்கள் வீட்டிலாவது சிநேகிதர் வீட்டிலாவது தங்கநேரிடுகின்றது. அப்பொழுது அந்தப் பந்து மித்திரர்கள் அவர்களுக்கு எவ்வளவோ உதவிசெய்திருப்பார்கள். அலுப்புக்கு வெந்நீர் ஸ்நானமோ, எண்ணெய் ஸ்நானமோ முதலியவைகளும், நேர்த்தியான போஜனமும்கொடுத்து, வழிக்கு வேண்டிய ஆகாராதிகளும் அளித்து வழியனுப்பியிருப்பார்கள். எவ்வளவு ரூபாய் கொடுத்தாலும், எத்தனையோ வேலைக்காரர் வைத்திருந்தாலும், அந்தநேரத்தில் ஆண்மக்களுக்கு அவ்வளவு வசதியும் அருமையான உபசாரணையும் அந்த இடத்தில் கிட்டமாட்டா. அப்பொழுது இந்த ஆண்மக்கள் மனதில் "இந்த ஜனங்களுக்கு நாம் எப்படிப் பதில் செய்யப்போகிறோம். நம்முடைய வீடுகளுக்கு இவர்கள் எப்போதாவது வருவார்களானால் மிக அருமையான உபசாரம் செய்யவேண்டும்" என்ற எண்ணம் உதித்திருக்கும். மேலும், ஆண்மக்கள் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இந்தவிருந்தினரால் அவர்களுக்கு எவ்வளவோ நன்மைகள் கிடைத்திருக்கலாம். இவை யாவும் பிற்காலத்தில் வீட்டிற்குவந்து அரசிகளாக வீற்றிருக்கும் பெண்மக்களுக்கு விபரமாய்த் தெரியாது. ஆதலால், அவர்கள் தங்கள் கணவர்களிடம் எல்லாக் காரியங்களையும் விபரமாய்த் தெரிந்து

கொண்டு, வீட்டிற்கு வந்த விருந்தினரை முகங்கோணுமல் பட்சமாய் உபசரிக்கவேண்டும்.

விருந்தினர் வரும்முன்னமே வீட்டை நன்முய்ச் சுத்தஞ் செய்து தட்டுமுட்டு ஜாமான்களை ஒழுங்காய் வைக்கவேண்டும். விருந்தினர் முன்னிலையில் எவ்வித கோபக்குறியுங் காட்டக்கூடாது.

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கின்றூர். சிரித்த முகத்துடன் சந்தோஷமாய் அவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அவர்கள் வருகிறநேரம், வழக்கமாய்ச் சாப்பிடும் நேரமாயில்லாதிருந்தால், வந்தவுடன் இலகுவான சிற்றுண்டியும் தாகத்திற்குத் தண்ணீருங்கொடுத்து உபசரிக்கலாம். வெகுதூரம் பிரயாணஞ்செய்து களைப்பாய் வந்திருந்தால், பால், மோர் முதலியவை கொடுக்கலாம். ஆகாரம் அருந்துமுன் முகம், கால், கை கழுவப் போதுமான தண்ணீரும், துடைக்க சுத்தமான துண்டுவஸ்திரமும் கொடுக்கவேண்டும். சிற்றுண்டி அருந்திமுடிந்ததும், வீட்டில் அப்புறம் ஆகாரம் அருந்தும் நேரத்தைத் தெரிவித்துவிடுவது நல்லது. இதற்கிடையில், அவர்கள் தாங்கள் அவ்வூருக்கு வந்த காரியத்தைக் கவனித்துக்கொண்டிருப்பார்கள். பிற்பாடு நல்ல போஜனம் ஆயத்தம்செய்து, பரிமாறுகிறவர்கள் தவிர மற்ற யாவரும் ஒரேபங்தியில் அமர்ந்து சாப்பிடவேண்டும். சாப்பிடுமுன் வெந்நீர் ஸ்நானம் வேண்டியவர்களுக்கு வெந்நீரும் தண்ணீர் ஸ்நானம் வேண்டியவர்களுக்குத் தண்ணீரும் ஆயத்தஞ் செய்து கொடுக்கவேண்டும்.

உணவு ஆயத்தம்செய்யும்போது, தம் திறமைக்கு மிஞ்சின உயர்ந்த வஸ்துக்களை வாங்கி, ஆயத்தம் செய்யவேண்டுவதில்லை. தங்கள் திறமைக்கு மிஞ்சிச் செலவழித்து விருந்து உபசரிக்கிறவர்கள், விரைவில் கடனாளிகளாக நேரிடும்.

'மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'

எதைச்செய்தாலும் அன்பான முகத்துடனும் அருமையான வார்த்தையுடனும் வெகு மரியாதையாகச் செய்யும் பட்சத்தில், அதுவே விருந்தினருக்கு மகிழ்ச்சியும் ஆறுதலுமாயிருக்கும்.

'ஒப்புடன் முகம லர்ந்தே யுபசரித் துண்மை பேசி
உப்பில்லாக் கூழிட் டாலு முண்பதே யமுத மாகும்
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடுங் கடும்பசி யாகுந் தானே'

என நமது முன்னோர் சொல்லியிருக்கிறார்கள்.

சாப்பிடுவதற்கு வாழை இலையை உபயோகிப்பது மிகவும் நல்லது. சாப்பிட்டவுடன் கைதுடைக்க ஒரு துண்டு வஸ்திரம் கொடுக்கவேண்டும். சாமானிய ஜனங்கள் இதைக் கவனியாததால், அநேகர் தாங்கள் சாப்பிட்ட ஈரக்கையைத் தாங்கள் கட்டியிருக்கும் ஆடையில் துடைத்து அசுசிப்படுத்திக்கொள்கிறார்கள்.

இரவில் படுக்கிறதற்கு சகல வசதிகளும் செய்துகொடுக்க வேண்டும். வீட்டைவிட்டுப் புறப்படும்போது, வழிப்பயணத்துக்குரிய வசதிகள் யாவும் ஒழுங்கு செய்து கொடுத்து, மரியாதையாய் அனுப்பவேண்டும்.

விருந்து உபசரிப்பது முக்கியமாய் இல்லாளுடைய கடமையே யாகும். கணவன் அந்தக் காரியத்தில் தலையிட்டு செய்யத்தக்கது ஒன்றுமில்லை. அதனால், இல்லாள் நல்லவளாயிருப்பின் கணவனுக்கு நல்ல பேரும், பொல்லாதவளாயிருப்பின் அவனுக்குப் பொல்லாப் பேரும் உண்டாகும். மேலும் பந்து ஜனங்களுக்குள் சமாதானத்தையும் சிநேகிதர்களுக்குள் பிரீதியின்மையும் வளர்வதற்கு ஏதுவாகும். ஆதலால் தன் கணவனோடு ஐக்கியமும், பந்துஜனங்களோடு சமாதானமும், நண்பர்களோடு பிரீதியுமாய் வாழவிரும்புகின்ற பெண்மகள் தன் வீட்டுக்கு வரும் விருந்தினரை அன்போடு உபசரிக்கவேண்டும்.

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'
'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.'

கணவன் பெயர்

(ஸ்ரீமான் S. N. ஸ்ரீநிவாஸ பிள்ளை செக்குளம்.)

நம் தேசத்து ஸ்திரீகள் கணவன் பேர் தெரிந்திருந்தும் அதை வாய்விட்டுச் சொல்லமாட்டார்கள். இது மரியாதை பற்றியே தவிர மற்றப்படியன்று. சில பெண்டுகள் மாமனார், மாமியார், மைத்துனர், முதலியோர் பேர்களையும் சொல்லாதிருக்கிறார்கள். இதுவும் மேன்மையே. காதலிக்குக் காதலன் பெயரும் காதலனுக்குக் காதலிபெயரும் மிகவும் அருமையாய்த் தோன்றும். இத்தன்மையான அன்பு, 'தலையன்பு' என்று தமிழ் நூற்களில் கூறப்பட்டுள்ளது. தமையந்தி தன் காதலனை நளச்சக்கரவர்த்தியின் பெயரைப் பிறர் சொல்லக்கேட்க அவாவி நின்றாள் என்பது,

"மின்னி லங்குவேல் நளன்பெயர்
கேட்டிடும் விழைவால்
பொன்னின் வார்கழல் விதர்ப்பர்கோன்
போலவை போந்து"

(மின்னல்போலும் பிரகாசிக்கின்ற வேலாயுதத்தைக் கையில் ஏந்தும் நளச்சக்கரவர்த்தியின் பெயரைப் பிறர் சொல்லக் கேட்கும் அவாவினால், தமயந்தியானவள், பொன்னால் செய்த பெரிய வீரக்கழலையைத் தரித்த பாதங்களையுடைய, விதர்ப்பநாட்டரசனின் இராஜசபைக்குச் சென்று) என்னும் நைடதச் செய்யுளால் நன்கு புலப்படும். அன்றியும், தன் அருமைக் கணவனைப்பிரிந்து இலங்கையில் அசோகவனத்திலே சிறையிருந்த சீதாபிராட்டியானவள், குரங்குவடிவத்துடன் அங்கு வந்து மரக்கிளையில் அமர்ந்து "இராம, இராம" என்று உச்சரித்த அனுமானுடைய வாய்மொழியைக்கேட்ட அளவில், அளவில்லாத ஆனந்தமடைந்து,

அரக்கனே ஆக வேறோர் அமரனே ஆக அன்றிக்
குரக்கினத் தலைவ னேதான் ஆதுக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிரிதின் உதவி
உண்டோ

(இராட்சதனுயிருந்தாலும் இருக்கட்டும் வேறொரு தெய்வப்பிறவியா யிருந்தாலும இருக்கட்டும். அல்லது குரங்குகளுக்குத் தலைவனுயிருந்தாலும் இருக்கட்டும். கொடுமையாகவோ இரக்கமாகவோ என்ன கோக்கமாக இருந்தாலும் இரக்கட்டும். என் பிராணநாயகனுடைய திருநாமத்தை எடுத்துரைத்து, என் மனத்தை உருக்கி, எனக்குத் தன்னறிவை உண்டாக்கி விட்டான். உயிர் போன்றதாகிய இத் திருநாமத்தைக் காட்டிலும் எனக்கு வேறு துணையுண்டோ?) எனக் கனிந்துகூறினாள். இங்ஙனமே கடவுளது திருநாமமும் தொண்டர்களுக்கு மகிழ்வைத் தருகின்றது. எம்பெருமானது மகிமையான திருநாமத்தைச் சொல்லும்போதும், கேட்கும்போதும், யாம் தலைகுனிந்து வணங்குவது என் கருதி? இதன் பொருளை யறிந்தவர் அதன் பொருளையும் அறிவர். மெய்ப்பொருள் கண்டறியாத மேனுட்டார் சிலர், நமது மாதர்களை இக்காரணம்பற்றிப் பரிகசிப்பதானது, அவர்தம் நாகரீக நிலைமையையும் காதல்மாட்சியையும் நன்குவிளக்குகின்றது! அன்னூர் செய்வதேபோல், கணவர் பெயர் சொல்லிக் காதுசெவிடுபடக் கத்துதற்கு நமது மாதர் அறியாராயினும், அவசியம் நேருமிடத்துக் குறிப்பினுற் புலப்படுத்தவும், மந்திரம் போல் செவிக்குள் ஓதவும், கையினுல் வரைந்துகாட்டவும் அறிந்துள்ளார். நமது ஆண்மக்களும், தமது பத்தினிகள் பெயரை எவ்விடத்திலும் எவர்முன்பும் வீணாக வழங்குவதில்லை.

காலத்தினுற் செய்த நன்றி

(ஸ்ரீமான் மு. நல்லசுவாமி நாடார், தமிழ்ப்பண்டிதர், பங்களாச்சாண்டை)]

முன்னொரு காலத்தில், சோழாது தலைநகராகிய உரையூரின்கண், தமிழ்ப்புலவரொருவரிருந்தார். இவரது பெயர் உறையூர் ஏணிச்சேரிமுடமோசியாரென்றும், முடமோசியாரென்றும், மோசியாரென்றும் வழங்கப்படும். மோசியென்னும் கிராமத்திற் பிறந்தவராதலாலும், முடவராயிருந்தமையாலும் இவர் இங்ஙனம் வழங்கப்பெற்றுர் போலும். இவர் சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி யென்பவனுல் பெரிதும் அபிமானிக்கப்பெற்றவர்.

இவர் ஒருநாள் சேரதேசம் சென்று, அத்தேசத்து அரசனாகிய அந்துவஞ்சேரலிரும்பொறையோடு அவனது வேண்மாடத்திலிருந்தனர்.

அரசனும் புலவரும் அவ்வாறிருப்புழி, அவ் வந்துவஞ்சேரலென்பார் புலவரை நோக்கி "வாரும் புலவீர்! அதோ பார்த்தீரா! ஒருவன் களிற்றின் மேலான் நக்கருவூரிடம் வருகின்றான்; இவன் யார்?'' என வருபவன்மேற் போருக் கெழுவான்போற் சினந்து கூறினன்.

சேரனது குறிப்பையறிந்த புலவர் உற்று நோக்கி, அங்கு வருபவன் தமதரசனாகிய கோப்பெருநற்கிள்ளி யென வறிந்து, அவனுக்கும் சேரனுக்கும் முன்னரேயுள்ள பகைமையை நினைந்து, தம் அரசனுக்கு யாது தீங்குறுமோ வென்றஞ்சி, சேரனை நோக்கிப் பின்வருமாறு கூறுவாராயினர்.

"அரசே! இவன் யாரெனக் கேட்பாயாயின் "இவன் வயலிடத்து மயில்களுதிர்த்த பீலிகளை உழவர் தமது நெற்சூட்டுடனே திரட்டும் கொழுவிய மீனையும் விளைந்த கள்ளினையுமுடைய மிக்க நீராகிய வேலியையுடைய நாட்டையுடையோன்." இவனே பெருநற்கிள்ளி. இவன் களிற்றின்மேலாகி வருவது பிறிதொன்றற்கு மன்று; இவன் களிறு மதம்பட்டுவிட்டது, அதனையடக்கல்வேண்டியே. அக்களிறு மரக்கலத்தையொப்ப, சுறுமீன்களை யொத்து வாண்மறவர் புடைசூழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் அவன் நின்னொடு போர்செய்யக் கருதினனல்லன். நீயும் இத்தகையாரோ டெதிர்த்தகைமையுடையை யல்லை. யான் வேண்டுவது இஃதொன்றே; அவன் நோயின்றிப் பெயர்தல் வேண்டும் என்றனர். இதற்குள் சோழனும் கருவூரையணுகினன்.

புலவரது மொழிகளைக் கேட்ட சேரமான் புலவர் புகன்றதே உண்மையென்று கருதிக் கிள்ளிக்கு யாதாமோரூறுஞ் செய்திலன். கிள்ளியும் மைந்துற்ற களிற்றையடக்கிச் சுகமாகத் தனது நாடடைந்தனன். புலவர் சோழனுக்குச் செய்தது காலத்தினாற் செய்த நன்றியே யன்றோ!

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.'

மனோன்மணிக் கண்ணி

(வித்துவான் ஆ. ச. சோணமுத்து நாடார், மகம்மதுசாலிபுரம்)

(தொடர்ச்சி)

85. உளத்தை யுருகவுஞ்செய் உண்மை பெருகவுஞ்செய்
சளத்தைச் செய்யாமலுஞ்செய் தாயே மனோன்மணியே
86. நல்லாரைச் சேரவுஞ்செய் ஞானமதிற் றேரவுஞ்செய்
பொல்லாரைச் சேராமற் பொருளீ மனோன்மணியே
87. விட்டிடச்செய் மூவாசை விரும்பிடச்செய் பாவாசை
கிட்டிடசெய் மெய்ஞ்ஞானம் கிளியே மனோன்மணியே
88. சரமான தேகமுனம் தற்சொருப மாயென்முனம்
வரமான தீயவிவண் வருவாய் மனோன்மணியே
89. அயிலைப் படைத்தவளே யாற்றை யடைத்தவளே
கயிலைக் கிறைவியரே கண்பார் மனோன்மணியே
90. எங்கேபோன் போனாலும் என்ன துன்ப மானாலும்
அங்கேவந் தாதரிப்பா யம்மா மனோன்மணியே
91. கவந்தனையே போக்குமம்மா கழலினைக்கா ளாக்குமம்மா
அவந்தனையே யான்புரியா தருளி மனோன்மணியே
92. வருவாய்கண் டுன்பாதம் வணங்குதற்கு நற்போதம்
தருவாய் சாஞ்செல்முனந் தாயே மனோன்மணியே
93. வினையேயொரு பெண்ணாகி யிரட்டவிரு கண்ணாகி
அனையேவந் தென்போத மழித்தாள் மனோன்மணியே
94. காலாகிக் கையாகிக் கனத்ததொரு மெய்யாகி
மாலாகி வந்ததனால் மருண்டேன் மனோன்மணியே
95. கன்னிதிரி சூலியரே காகக்க பாவியரே
வன்னி மலையான மரகத மனோன்மணியே
96. உடலினைவிட் டென்னுவி யொடுங்குமுன்னே னைக்கூவி
மடலினைவி லக்குமம்மா வருவாய் மனோன்மணியே
97. ஓடித் திரியும்நெஞ்சை ஓடாத டக்கிவிஞ்சை
பாடித் திரியும்படி பணிப்பாய் மனோன்மணியே

98. என்புசதை பிள்ளைகளும் எணற்கரிய கோழைகளும்
இன்புவைத்தே தந்தாயோ எனக்கே மனோன்மணியே
99. என்றும்பதி னாறுண்டாய் இருக்கொருவர்க் கீய்ந்தாண்டாய்
இன்றும்யான் கோரும்வர மீவாய் மனோன்மணியே
100. கோரும் வரமதுதான் கூறுவனின் றுளதுதான்
சேரும் வரமதுதான் செம்பொன் மனோன்மணியே
101. மட்டித்த னத்தனம்மா வழுத்தாச்சி னத்தம்மா
சுட்டித்த னத்தனம்மா ஆய மனோன்மணியே
102. வஞ்சனை செய்யாதே மனக்குறைகள் வையாதே
கஞ்சனைச் சிறைநீக்கிக் காத்த மனோன்மணியே
103. தாபத்தை நீக்குமம்மா தாசருக்கா ளாக்குமம்மா
ஆபத்தை நீக்குமம்மா அம்பிகை மனோன்மணியே
104. செபத்தையான் செய்யவில்லை சிவபூசை செய்யவில்லை
தபத்தையான் செய்யவில்லை தயைசெய் மனோன்மணியே
105. வாசிதனைக் கட்டிடவும் மாஞானங் கிட்டிடவும்
தேசிகனைப் போலும்வந்து செப்பாய் மனோன்மணியே
106. ஆக்கிடுவை சர்வமுமே யடியேன்றன் கர்வமுமே
போக்கிடுவை யெங்குமுறை புவனை மனோன்மணியே
107. சோதனைசெய் யாதருள்வாய் துன்பஞ்செய்யா தருள்வாய்
வேதனைசெய் யாதருள்வாய் வித்தே மனோன்மணியே
108. இருளை விலக்குமம்மா வெமனை விலக்குமம்மா
பொருளை யருள்வையம்மா பொன்னே மனோன்மணியே

ஓம் பரமசிவம் திருச்சிற்றம்பலம் வேலு மயிலும் காக்க சிவா.
இஃது 1098-ம் ருத்ரோத்காரி ௵ ஆனி ௴ 7௳ குருவாரம் தொடங்கி, காப்பும் நூலில் 72 கண்ணியும், 8௳ சுக்கிரவாரம் நூலில் 36 கண்ணியும் பாடி, ஆகக்கண்ணி 108-ம் எழுதி முகிழ்ந்து முற்றும். சுபம்.

ஆ. ச. சோணமுத்து நாடார்

விடுமுறைப் பிரயாணம்

(ஸ்ரீமான் J. S. பொன்னையா நாடார், பீ. ஏ. வகுப்பு மாணவர், திருச்சி)

செங்குன்னூரிலிருந்து மோட்டார் ஏறிக் கொட்டாரக்கரையென்னும் இடம் போனேன். எனது நண்பரது வீட்டை விட்டுப் புறப்படும்போது, நான் நமக்குள் வழியனுப்புவதுபோல் வழியனுப்பிக் கொள்ளவில்லை. அந்த ஜனங்கள் ஆங்கிலேய வழக்கங்களைத் தழுவுவதில்லை. குட் மார்னிங் (Good morning) குட் ஈவ்னிங் (Good evening) தாங்க் யூ (Thank you) குட் பை (Good bye) முதலான வழக்கங்களை அனுஷ்டிப்பதில்லை. அவர்கள் உடையும் அணிகளும் எவ்வளவு ஆடம்பரமில்லா திருக்கிறதோ, எவ்வளவு தூரம் தங்களுடைய நடையுடை பாவனைகளை அனுசரிக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்களோ, அவ்வளவு தூரம், இவ்விஷயங்களிலும் வீண்வேஷம் இல்லாது முகமலர்ச்சியும் நற்குணமும் உள்ளவர்களாயிருக்கிறார்கள்.

நான் போய்ச்சேர்ந்த மோட்டாரில் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்குப் போகும் சில மாணவரைச் சந்தித்தேன். அவர்கள் பெண்மணிகள். அவர்களது மலர்ந்த முகவும், களிப்பு நிறைந்த கண்களும், உல்லாசமாகத் தங்களுக்குள்ளே உரையாடிக்கொண்டு போன சிறப்பும், மடந்தையர்க்குரிய நாணத்தோடு கூடிய புன்னகையும் எல்லாம் இங்கு விவரிக்கிற் பெருகும். சுமார் நாற்பது மைல் தூரம் அக்கூட்டத்தோடு சேர்ந்து பிரயாணம் பண்ணியதிலிருந்து அவர்களுடைய பள்ளிக்கூட ஜீவியமும் வீட்டிலுள்ள நடக்கைகளும் ஒருவாறு தெரிந்துகொண்டேன். நான் அவர்கள் ஒருவரோடாவது ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஏனெனில் அவர்களோடு வினவுவது ஆசாரக்குறை என்று எண்ணி இருந்தேன். அது அப்படியல்லவென்று பின்னால் அறிந்துகொண்டேன். அவர்கள் யாதொரு களங்கமுமின்றிச் சாதாரணமாக நம்முடன் பேசுவார்கள். வினவிக்கொள்வார்கள். அன்புடன் உபசரிப்பார்கள். வழியிலே கண்ட காட்சிகளையெல்லாம் விவரிக்க இங்கு இடமில்லை.

இப்பொழுது மத்தியபாகத்தைக் கடந்து தென்பாகத்துக்கு வந்து சேர்ந்துவிட்டோம். இந்தத் தேசம் செழிப்பில்லை.

இடையிடையே கடற்கரை தோன்றும் பாகங்களில் மட்டும் வளப்பமிருந்த சோலைகள் காணப்படுகின்றன. வெப்பம் அதிகமாகையால் ஜனங்கள் அழகுமங்கி நல்ல தேகக்கட்டில்லாது நம்முடைய நாட்டிலுள்ளவர்களைப்போன்றிருக்கிறார்கள். இங்குத்தான் ஒவ்வொரு வீட்டைச் சுற்றியும் சுற்றுமதில் எழுப்பியிருக்கிறார்கள். வாழை, தென்னை முதலானவைகள் ஒழுங்காக நாட்டப்பட்டிருக்கின்றன. கயறு திரித்தல், பாய்பின்னல் முதலான பல கைத்தொழில்கள் நடக்கின்றன. ஆனால் ஜனங்களுடைய பழக்கவழக்கங்களாவது தேசத்தின் இயற்கையமைப்பாவது தமிழ் நாட்டினின்று அங்குச் செல்வோரைச் சந்தோஷிப்பிக்காதென்றெண்ணுகிறேன்.

மலைநாட்டின் உட்பிரதேசங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லி முடித்துவிடுகிறேன். ஆனால் நான் அங்கு போய்ப்பார்க்கப் போந்த அவகாசம் கிட்டவில்லை. நாம் போய்ப் பார்க்கவேண்டிய பாகம் அது ஒன்றே. சிருஷ்டிகாது விசித்திர வேலைப்பாடும், இயற்கையழகும், மலைகளின் வளமும், அறிய விரும்புவார் அங்கேயன்றி வேறே யெங்கும் அறிந்துகொள்ள முடியாது.

எனது பிரயாணத்தை முடிப்பது இராஜதானி நகரமாகிய திருவனந்தபுரம் ஆக நேரிட்டதைப்பற்றி மிகவும் சந்தோஷமே. ஆனால் நம்மைக் கவரச்செய்யும் காட்சிவேறொன்றும் அங்கில்லை. நம் நாட்டிலுள்ள திருநெல்வேலி, மதுரை, திருச்சி, சென்னை முதலான பட்டணங்கள் போலவே அது இருக்கின்றது. மலையாள இராஜ்யத்தின் இயல்பையறிய விரும்புவோர். வடமத்திய பாகங்களிலும் உள்நாடாகிய மலைப்பிரதேசத்திலுமே காண வேண்டும். தென்பாகம் நமது நாடுபோலவே யிருக்கிறது. நூற்றுக்கைம்பதுபேர் நன்றாகத் தமிழ் பேசுகிறார்கள். முழுவதும் தமிழ்நாடு போன்றிருக்கிறது. தமிழ் அங்கும் அரசு செலுத்திய தென்பதற்கு இதையன்றி வேறு ஆதாரமும் வேண்டுமோ? ஜனங்களுடைய பழக்க வழக்கங்களிலும், தேசத்தின் இயல்பை வருணிப்பதிலும் அநேகத்தை விட்டுவிட்டேன். நேரில் பார்ப்பவரோ முழுவதும் அறியக்கூடும். பேக்கன் என்னும் ஒரு ஆங்கில ஆசிரியர் கூறியவாறு, தேசாந்தரப் பிரயாண

மானது அளவிறந்த ஆனந்தத்தை அளித்து, நமது மனத்தை விசாலப்படுத்தி, பலருடனும் பழகுவதால் அறிவையும் பெருகச்செய்து, அவர்களிடமிருந்து நாம் அநேக நூதனவிஷயங்களைக் கற்றுக் கொள்ளும்படி செய்கிறது.

கடிதங்கள்

குறிப்பு:— கடிதநேயர்கள் அபிப்பிராயத்துக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்

1. பாலியவிதவா சங்கடநிவிர்த்தி

மகாகனம்பொருந்திய "ஆனந்தவிஜயன்" பத்திராதிபரவர்கள்,
பாளையங்கோட்டை.

ஐயா,

சென்ற மார்ச்சுமாச சஞ்சிகையில் பாலியவிவாகமும் பரிதாபகோலமும் என்ற தலையங்கத்தின்கீழ் பாளையங்கோட்டை ஸ்ரீமதி சிவகாமியம்மாள் அவர்கள் எழுதிய அரிய வியாசத்தை உவகையோடு படித்தேன். ஆயினும், பாலியவிவாகத்தால் அவதிப்படும பரிதாப ஸ்திதியிலுள்ள பெண்மக்களுக்கு நிவிர்த்தி மார்க்கம் சொல்லவந்த அந்த அம்மாள், அன்னாருக்கு நற்கல்வி கற்பித்து மகிழ்விக்கும் ஒரே மார்க்கத்தை மட்டும் வெளியிட்டு வியாசத்தை முடித்துவிட்டமை யாதோ? வேறு நன்மார்க்கம் இல்லையோ? இத்துணைக் கல்வியறிவும் சுவாதீனப் புத்தியும் பெற்ற அந்தப் பெண்மணி, புனர் விவாகமாகிய நன்மார்க்கத்தை, துணிந்து புகட்டுவதற்குப் பின்வாங்குவ தென்னோ? பெண்மக்களுக்குப் புனர்விவாகமானது நமது வேதங்களிலேனும், ஆகமங்களிலேனும், மனுதர்மம் முதலான மற்ற சாஸ்திரங்களிலேனும் விலக்கப்பட்டுள்ளதோ? இல்லையே! அஃதேல், அவர்கள், பாலியவிதவைகளுக்குப் புனர் விவாகம் அவசியம் என்று சாஸ்திரோக்தமாக வலியுறுத்தலாகுமே. அடிமைச் சுபாவமும் தந்நயமும் மிகுந்த ஜீவகாருண்யமற்ற சிற்சில ஆண்மக்களேயன்றி அதன் அவசியத்தை மறுத்துக் கூறவல்லார் யாவர்? ஸ்ரீமதி சிவகாமியம்மாள்உயர்ந்தவர்ணத்தார் என்னும் வகுப்பைச் சேர்ந்தவா

தலின், புனர் விவாகத்தைப்பற்றிப் பேசவும் வாய்கூசுகின்றனர் போலும். எனினும் அந்த அளவில் தம்மால் சொல்லக்கூடிய நல்லாலோசனைகளைச் சொல்ல முன்வந்த அவர்களது பெருந் தகைமையை யான் மிகவும் பாராட்டுகின்றேன்.

K. விசாலாட்சியம்மாள்,
திருச்சி.

20—4—24

2. போதனையும் சாதனையும்

பாளையங்கோட்டை மக-ள-ா-ஸ்ரீ "ஆனந்தவிஜயன்" பத்திராதிபாவர்களுக்கு:—

ஐயா,

தென்னாட்டில் தமிழ் வளர்ச்சிக்கெனத் தோன்றிய ஆனந்த விஜயன் மார்ச்சுமாச சஞ்சிகையில் கொல்லாமை என்ற தலைப் பின்கீழ் எழுதிய வியாசத்தில், பல நூல்களும் ஜீவராசிகள் எண் பத்துநான்கு லட்சமெனக்கூற, அறுபத்துநான்கு லட்சமென எழுத்தாளும் வரைந்தமை யென்னவோ அறியோம். வியாசம் எழுதுவது சுலபமான வேடிக்கைக் காரியமல்ல. எழுதுவோர் தமிழிலோ, ஆங்கிலத்திலோ, தெலுங்கிலோ, யாதாமொன்றில் பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டுவதன்றி, சுயகொள்கையும், அதன் பகுத்தறிவும் அவருக்குத் தேவையன்றோ? அன்னவர் எழுதும் விஷயத்தைத் தழுவி அவரது கொள்கையு மிருக்க வேண்டாவோ? ....இனியேனும் பத்திராதிபாவர்கள் கவனிப்பார்களென்றும், வியாசகரும், தொட்டும் என்ற மட்டிலுமே நிறுத்திவிட வேண்டும் என்றும் இறைஞ்சி, விஜயனின் நீடூழிவாழ்வுக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

V. S. நடனசபாபதி,
திருமங்கைநகர்.

25—4—24

3. மொழிபெயர்ப்பாளர் மொழித்திறம்

கனம் தங்கிய "ஆனந்தவிஜயன்" பத்திராதிபரவர்கள்,
பாளையங்கோட்டை.

ஐயா,

காலஞ்சென்ற சுத்த வீரனான சம்புலிங்கம் சரித்திரத்தை ஆங்கிலமாதுசிரோமணி ஒருவர் பல பாஷைகளில் அச்சிட்டுப் பிரசுரித்திருக்கின்றனர் எனக் கேள்வியுற்று, ஆங்கிலத்திலும் தமிழ்மொழியிலும் ஒவ்வொரு பிரதி தருவித்துப் பார்வையிட்டேன். நூலாசிரியர் மிஷனரி வகுப்பைச் சேர்ந்தவராதலின், அவனது ஞானஜீவியத்தைமட்டுமே ஒருவாறு விவரித்திருக்கின்றனர். ஆயினும், அப்புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவாது அருந்திறலை அறியலுறின் கற்றூர் எவரும் நகையாதிரார். அப்புத்தகத்துக்கு சேம்பலிங்க நாதார் கதை எனப்பெயர் இட்டிருப்பதே அவரது மொழித்திறத்தை விளக்கப்போதிய சான்றாம். நாடார் என ஒரு பதம் தமிழ் மொழியில் வழங்குவதைத் தானும் அவர் இதுகாறும் அறிந்திலர் போலும். ஒருகால், செத்துப்போன வீரர்களைத் தேவதைகளாக்கும் திவ்ய சபையில் தாமும் ஓர் அங்கத்தினராய், சம்புலிங்கத்துக்கு நாதர் எனப்பட்டம் சூட்டி, பின்னர் நீட்டல் விகாரம் பற்றி நாதார் என நீட்டிவிட்டனர் போலும். இவரது மதியின் நீளத்தை யாம் என் புகல்வது? நிற்க, இழிஞர் தமிழ், கிறிஸ்தவத் தமிழ், ஐரோப்பியத் தமிழ், முதலான கொடுந்தமிழினத்துக்கும் அப்புத்தகம்சிறந்த இலக்கியமாக நின்று இலங்குகின்றது. நாலடியார் இதை மனத்தில் வைத்தவராய் "அள்ளிக்கொள் ... .அறிவுடையார்" என்றூர் என இவர் இங்ஙனம் பலவிடங்களில் தள்ளாடுவதை நோக்குங்கால், இவரது கல்விசைப்புலமை எம்போலியரால் எடுத்துச் சொல்லிச் சிரிக்கவுந்தரமன்று. பொதுஜனங்களுக்குப் பயன்படக்கூடிய ஒரு புத்தகத்தை மொழிபெயர்க்கும்படி இத்தகைய பெரும் புலவரை நியமித்த அத் தலைவரை யாம் என் சொல்லி வருந்துவது? இதுவும் நந் தமிழ்மாது செய்த தவக்குறைவேயோ!

P. ஸ்ரீநிவாச நாடார்,

2—5—24 ஆலங்குளம்.

4. The Juvenile Association, Palamcottah.

கிறிஸ்தவ சகோதரர்களுக்கு அறிவிப்பு :—

சகோதரர்களே !

கர்த்தருடைய பெரிதான கிருபாகடாட்சத்தால் நமது சங்கத்தின் முதலாவது ஆவிக்குரிய கூட்டம், கொக்கிரகுளத்தைச் சேர்ந்த ஸெஷன் ஜட்ஜ் அவர்கள் பங்களாவில் சென்ற வருஷம் ஜூன் மீ 2உ சனிக்கிழமை இரவு 9–மணி முதல் 4உ திங்கள் கிழமை காலை $5\frac{1}{2}$-மணி முடிய நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்கள் ஒன்பது சகோதரர். இந்த நடைபெற்ற கூட்டங்கள் ஆயத்தக்கூட்டம், வேத ஆராய்ச்சிக் கூட்டம், காலை ஆராதனை, தியான வேளை, ஜெபக்கூட்டம், மாலை ஆராதனை, சுவிசேஷ ஊழியம், மிஷனரிக் கூட்டம், ஆவிக்குரிய அனுபவ சம்பாஷணைக்கூட்டம், முடிவுரைக்கூட்டம் எனப் பற்பல நாமதேயங்கள் பூண்டுள்ளன. மேற்கூறிய கூட்டங்களனைத்திலும் நமது சங்கத்துக்கு அங்கத்தினரான வாலிபசகோதரர்களே அக்கிராசனம் வகித்து உபந்நியாசங்கள் செய்து சிறப்பித்தனர். இக்கூட்டங்கள் உண்மையில் நமது வாலிபசகோதரர்களுக்கு ஆவிக்குரிய நன்மைகளுக் கேதுவாயிருந்தன என்று ஐயமறச் சாட்சி பகரலாகும்.

V. தேவதாஸ் தியாகராஜ்,

காரியதரிசி.

நாடார் பிரஸ்

கீழவெளி வீதி, மதுரை.

தெய்வ கிருபையால் நானது ரக்தாக்ஷி-ஞூ சித்திரைமீ 25உ (7—5—24) புதன்கிழமை காலை 10-30 மணி முதல் ஆரம்பமாகி நடந்துவருகிறது.

சகல கனவான்களும் தங்களுக்கு வேண்டிய திருமணப் பத்திரிகைகளையும் வியாபாரத்துக்கு வேண்டிய சகலவிதமான லெட்டர் பேப்பர், ரசீது, சேக், உண்டியல், பட்டியல், கார்டு, கவர், கேட்லாக், காலண்டர், சோடா பாட்டில் லேபிள் வகையறாவையும் பயிண்டிங் வேலையில் குறிப்பு, பேரேடு, கையெழுத்துப் புஸ்தகம், சிட்டை வகையறாக்களையும், விளம்பர வகைக்கு வால் போஸ்டர் முதலான சகல வேலைகளையும் எங்களிடமே ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

எங்கள் ஆபீசில் சகல விதமான பயிண்டிங் வேலைகளும், அச்சு வேலைகளும், கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு, சுத்தமாகவும், நாகரீகமாகவும், குறிப்பிட்ட காலத்தில் தயார் செய்து கொடுக்கக்கூடும்.

குறிப்பு:—திருமணத்திற்கு வேண்டிய பத்திரிகை கார்டு வகையறாக்கள், இங்கிலீஷ், தமிழ், எழுத்துக்களில் தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு, பல கலர்களில், சுவாமி படங்களோடு, அலங்காரத்துடனும் வெகு நேர்த்தியான வேலைப்பாட்டுடனும் செய்து கொடுக்கக்கூடும்.

எல்லோருடைய நல்வரவையும், எதிர்பார்க்கும்,

க. முத்துக்குமாருசாமி நாடார்,

மேனேஜிங் டைரெக்டர்.

அமரர் புராணம்

காலஞ்சென்ற மகாகல்விமான் J. S. கோர்நேலியூ நாடார் அவர்கள் B. A., இயற்றிய அரிய நூல். பாடசாலைகளில் வழங்கும் சரித்திரப் புஸ்தகங்களில் வெளிவராத இந்துதேச அதிபூர்வீக வாலாற்றைத் தெரிவிப்பது. முப்பத்துமுக்கோடி தேவர்கள் விருத்தாந்தத்தை நன்கு புலப்படுத்துவது. நாலாயிரம் ஆண்டுகளாய் இந்நாட்டைப் பரிபாலித்து வந்த இந்து அரசர்களின் ஆதியோடந்தமான சரித்திரத்தை இனிது விளக்குவது. புராணேதிகாச காவியங்கட்குப் புத்துயிர் கொடுப்பது. அகண்ட பரிபூரண சச்சிதானந்த முழுமுதற் கடவுள் ஒருவரேயென நிலைநாட்டுவது. இதன் அருமை பெருமைகளைப் பாராட்டாதவர் எவரும் இல்லை. 500 பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம். சில பிரதிகளே கையிருப்பு.

விலை ரூபாய் மூன்று

வேண்டுவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதவும்:—

ஸ்ரீமதி பூரணம் கோர்நேலியூஸ் அம்மாள்,

நாசரேத்து P. O. திருநெல்வேலி ஜில்லா.

ஆனந்த விஜயன்

தமிழ் வழங்கும் இச்சென்னை மாகாணத்தில் பற்பல பத்திரிகைகள் நடைபெறுகின்றன. எனினும், சகல ஜனங்களுக்கும் ஒருங்கே பயன்படும் மாதாந்தப் பத்திரிகை மிகச் சிலவேயாம். அவற்றுள்ளும் தக்ஷிண பிரதேசத்தில் அத்தன்மையான பத்திரிகை யாதும் இல்லை. இக்குறையை நிவிர்த்திசெய்ய வேண்டியே, ஆனந்த விஜயன் என்னும் அருமையான இந்த மாதாந்தப் பத்திரிகையைத் தொடங்கியிருக்கிறோம். இது உயர்ந்த விஷயங்கள் அடங்கியது; குறைந்த சந்தாவுடையது இனிய எளிய அழகிய செந்தமிழ்நடை வாய்ந்தது. ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமியர் முதலிய அனைவரும், அச்சமின்றி ஆனந்தமாய் வாசித்துப் பயன்பெறுமாறு விஜயஞ் செய்வது. வருணம், மதம், கட்சி முதலிய எத்தகைய வேறுபாடுமின்றித் தமிழ்மக்கள் யாவருக்கும் பொதுவாய் உழைத்துவருவது. சன்மார்க்கம், தெய்வபக்தி, லௌகிகஞானம் முதலான பற்பல அரிய பொருட்களும், மகிழ்ச்சியை விளைவிக்கும் அபிநவகதைகளும், சரித்திரங்களும், முக்கிய வர்த்தமானங்களும் இதில் வெளிவருவதால், தமிழ் அறிந்த யாவரும் இதனை அன்போடு ஏற்று ஆதரிப்பார்களென்று உறுதியாய் நம்புகிறோம்.

வருஷ சந்தா

உள்நாட்டுக்கு தபாற்கூலியுட்பட	ரூ.	1—0—0
வெளி நாட்டுக்கு ,,	ரூ.	1—4—0

சந்தாத்தொகை முன்பணம் மணியார்டர் செய்தல் வேண்டும்.

G. A. செல்லையா நாடார், M. A., B. L.
P. A. தங்கசாமி நாடார் B. A., M. L. } பரிபாலனர்கள்

D. மாசில்லாமணி நாடார், தமிழ்ப்பண்டிதர்
Y. இராஜநாயகம் நாடார், நூலாசிரியர் } பத்திராதிபர்கள்

M. துரைசாமி தாமஸ் நாடார், சுற்றுப்பிரயாண ஏஜெண்டு.

பத்திரிகை வேண்டுவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதவும்:—

மானேஜர், 'ஆனந்த விஜயன்' ஆபீஸ்,
புதுப்பேட்டைத்தெரு, பாளையங்கோட்டை.